இந்திய உயர் ஸ்தானிகராலயம்
கொழும்பு

ஊடக அறிக்கை

பதுளை மாவட்டத்தில் இந்திய வீடமைப்புத் திட்டத்தின்கீழ் புதிய வீடுகளுக்கான அடிக்கல் நாட்டல்

பதுளை மாவட்டத்தின் அலகொல்ல தோட்டப் பகுதியில் 2026 செப்டம்பர் 29 ஆம் திகதி 51 புதிய வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல், கண்டியில் உள்ள இந்திய உதவி உயர் ஸ்தானிகர் திருமதி வி எஸ் சரண்யா இலங்கையின் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் கௌரவ கே.வி. சமந்தா வித்யாரத்ன மற்றும் பிரதி அமைச்சர் கௌரவ பிரதீப் சுந்தரலிங்கம் ஆகியோரால் நாட்டப்பட்டது.

2. இவ்வீடுகள் இந்திய வீடமைப்பு திட்டத்தின் நான்காம் கட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் இரண்டாவது நிலையின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்றன. நான்காம் கட்டம் முன்னதாக 2025 ஒக்டோபரில் இலங்கை ஜனாதிபதி அதிமேதகு அனுரகுமார திசாநாயக்க அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. குறித்த நான்காம் கட்டமானது இலங்கையின் ஆறு மாகாணங்களில் உள்ள பெருந்தோட்ட சமூகத்தினருக்காக 10,000 வீடுகளை நிர்மாணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

3. இந்திய வீடமைப்புத் திட்டமானது 18 பில்லியன் இந்திய ரூபாவுக்கும் அதிகமான நன்கொடை உதவியுடன் சுமார் 60,000 வீடுகளை நிர்மாணிப்பதற்காக இலங்கையில் இந்திய அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் ஒரு முக்கிய அபிவிருத்தி திட்டமாகும். இதன் முதல் இரு கட்டங்களின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 46,000 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டதுடன் புனரமைப்பு பணிகளும் முன்னெடுக்கப்பட்டன. தொடர்ந்து மூன்றாவது கட்டத்தின் கீழ் பெருந்தோட்டப் பிராந்தியங்களில் 4,000 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன.

4. இலங்கையுடனான இந்தியாவின் அபிவிருத்தி ஒத்துழைப்பு பங்குடைமையில் இந்திய வம்சாவளித் தமிழ் சமூகமும் பெருந்தோட்டப் பிராந்தியங்களும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. வீடமைப்பு திட்டத்திற்கு அப்பால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களில் டிக்கோயாவில் பல்நோக்கு சிறப்பு மருத்துவமனை அமைத்தல், 'ஸ்மார்ட்' வகுப்பறைகளை ஸ்தாபித்தல், 9 பெருந்தோட்டப் பாடசாலைகள் அபிவிருத்தி மற்றும் சீதை அம்மன் ஆலயத்தின் அபிவிருத்திக்காக இந்தியாவின் உதவியினை அறிவித்தல் ஆகியவை உள்ளடங்குகின்றன. அத்துடன் இலங்கைக்கு இந்திய வம்சாவளித் தமிழ் சமூகம் வருகை தந்ததன் 200 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், ஜூலை 2023 இல் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களால் 750 மில்லியன் இந்திய ரூபா மதிப்பிலான பல்நோக்கு அபிவிருத்தி பொதி அறிவிக்கப்பட்டது.

5. இந்நிகழ்வில் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் உயரதிகாரிகள், பெருந்தோட்ட மனிதவள மேம்பாட்டு நிதியத்தின்

பிரதிநிதிகள் மற்றும் அலகொல்ல தோட்டத்தைச் சேர்ந்த பயனாளிகள் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

****

கொழும்பு
29 செப்டெம்பர் 2026